FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364185

1. District : கள்ளக்குறிச்சி PS: இ.த.க.பிரிவு Year: 2026 FIR No.: 07/2026 Date: 18.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7, 12 மற்ற 7 of PC Act
(ii) Act சட்டம்: by the PC Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 108 BNSS
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 17.07.2026 Date to : 18.07.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 17.00Hrs Time to : 02.30 Hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 18.07.2026 Time : 13.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 18.07.2026 Time : 13.00 Hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 20 கி.மீ தென்மேற்கு
Beat Number : (b) Address : அருவாய் வட்டாட்சியர் அலுவலகம், சின்னசேலம்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. சிவசுப்ரமணியன் (b) Father's/ Husband's Name : கிருஷ்ணமூர்த்தி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : கூடுதல் அரசுத்தரப்பு தொழில் அரசுவலர், நடுவர், விருப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டம் (g) Address : முகவரி மாண்புமிகு அரசுவலர் அரசுவலகம், நடுவர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. தேவதாஸ், நாணையமைச்சு துணை வட்டாட்சியர், 2) திருமதி. அருள்மொழி, வட்டாட்சியர் (கு.பொ) 3. திரு. முத்துவேல், நிர்வாக உதவியாளர், நிர்வாகநிர்வாகம் பிரிவு, 4. திரு. மோகன்ராஜ், பிரிவுஅலுவலர் (கு.பொ) (தொலைபேசி) 5. திரு. நாகபதி, பதிவுரை எழுத்தர், 6. நாகராஜ், நில வருவாய் (தனியர்) 7. திரு. இளையராஜா, உதவியாளர் (தொலைபேசி) இதில் 1, 2, 4, 5, 7 ஆகிய அனைவரும் வட்டாட்சியர் அலுவலகம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

18.07.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.07.2026

Name: பெயர் E. அருணாச்சலம்
Rank: நிலை தலைமைக் காவலர்

உ.தா.ப. எண்
தலைமைக் காவலர்

கள்ளக்குறிச்சி ஊ.த.க.பிரிவு குற்ற எண்.07/2026, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 இன் விபரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது, அம்மையீர், நான் இன்று 18.07.2026-ந் தேதி சுமார் 13.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர் திரு.சிவசங்கரன் த/பெ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று 18.07.2026, 15.00 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.07/2026/KLK, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர் சிவசங்கரன் கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி ந.க.எண்:ஆகு1/389/2026, நாள்.18.07.2026 ஐயா, பொருள்: திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் - 17.07.2026 முதல் 18.07.2026 வரை கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:17.07.2026 முதல் 18.07.2026 வரை. கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர் திரு.சிவசங்கரன் த/பெ கிருஷ்ணமூர்த்தி ஆகிய எனக்கு சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சின்னசேலம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் இருந்து பட்டாமாறுதல், பட்டா இரத்து, புலபட திருத்தம், ஆக்கிரமைப்பு தொடர்பான, கட்டிடம் உரிமை சான்று, பிறப்பு இறப்பு சான்று, முதியோர் உதவி தொகை, ஆதரவற்ற விதவை உதவிதொகை, மாற்றுதிறனாளி உதவி தொகை, திருமண உதவி தொகை, கல்வி உதவி தொகை, இலவச வீட்டுமனை பட்டா மற்றும் எல்லை அளவு பணி தொடர்பாக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடமிருந்து இலஞ்சம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின்படி மேற்படி அலுவலகத்தை திடீராய்வு செய்வது சம்மந்தமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கிருந்த காவல் ஆய்வாளர் திரு.இ.அருண்ராஜ் அவர்களிடம் கலந்தாலோசித்து, நான் காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சுமார் 16.15 மணிக்கு புறப்பட்டு சுமார் 17.00 மணிக்கு சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்தடைந்தோம். மேற்படி அலுவலகமானது சின்னசேலம் to சேலம் ரோட்டில் தெற்கு பார்த்து அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் உள்ளே செல்ல முற்பட்டபோது அறையின் வெளியில் உள்ள வராண்டாவில் பின்னர் விசாரணையில் பெயர்விலாசம் தெரிந்த 1) திரு.ச.சின்னதுரை, த/பெ சடையன், 2) திரு.வெங்கடேசன் த/பெ பச்சமுத்து, 3) திரு.சங்கர் த/பெ பெரியசாமி 4) திரு.அஸ்வின் த/பெ ரவி, 5) திரு.செல்வராசு த/பெ பெருமாள் 6) திரு.ஆனந்தன் த/பெ பெருமாள் 7) திரு.சக்தி த/பெ பழனிசாமி 8) திரு.கத்தசாமி த/பெ முத்து 9) செல்வம் த/பெ அண்ணாதுரை, 10) கமாட்சி க/பெ குருநாதன், துப்புரவு பணியாளர் (தற்காலிகம்), 11) திரு.கோவித்தசாமி த/பெ பெரியசாமி, வி.மாமாந்தூர் கிராம உதவியாளர் மற்றும் 12) திரு.ராஜகண்ணு த/பெ கோபல், வி.கிருஷ்ணாபுரம் கிராம உதவியாளர் ஆகியோர் இருந்தனர் அவர்களை அப்படியே வராண்டாவில் அமரச்செய்து அவர்களை கண்காணிக்க ஒரு காவல் அலுவலரை நியமித்துவிட்டு, பிறகு நான் ஆய்வுக்குழுவிருடன் வருவாய் வட்டாட்சியரின் அலுவலகத்தின் பிரதான அறையின் உள்ளே சென்று, மேற்படி அறையின் தென்மேற்கு மூளையில் இருந்த சின்னசேலம் வருவாய் வட்டாட்சியரின் அறையை

பார்த்தபோது அவர் அங்கே இல்லை. பின்னர் மேற்படி அறையின் நுழைவு வாயிலின் வலது புறத்தின் போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.தேவதாஸ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் அமர்ந்திருந்தார். அவரின் இருக்கைக்கு வலது புறத்தில் தெற்கு புறம் பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.பிரகாஷ்ராஜ் த/பெ அண்ணாதுரை, இளநிலை வருவாய் ஆய்வாளரும், அவருக்கு வலது பக்கத்தின் தெற்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.தவசிராஜா த/பெ சீனிவாசன், முதுநிலை வருவாய் ஆய்வாளரும் இருந்தனர். அவருக்கு நேர் எதிரேவும், வருவாய் வட்டாட்சியருக்கு மேற்கு புறத்தில் வடக்கு பார்த்தவாறு இருந்த மண்டல துணை வட்டாட்சியர் அறையில் திரு.சீனிவாசன் த/பெ பாலு, மக்கள் தொகை கணக்கெடுப்பாளரும் (தற்காலிக பணியாளர்) மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களது இருக்கையில் முத்துவேல் த/பெ மாணிக்கம், தத்தாதிபுரம் கிராம உதவியாளரும் இருந்தனர். அவர்களை மேற்படி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் பிரதான அறையில் அமரச்செய்து பின்னர் அவர்களிடம் வருவாய் வட்டாட்சியர் திரு.வினோத்பாபு, அவர்கள் மாவட்ட ஆட்சியருடன் கள்ளக்குறிச்சி இரயில் நிலையம் திறப்பு விழா தொடர்பாக சென்றுள்ளதாக பின்னர் விசாரித்து தெரிந்து கொண்டதால் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டபோது தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.தேவதாஸ் அவர்களிடம் நானும் உடன் வந்த காவல் குழுவினர்கள் அனைவரும் தங்களது அடையாள அட்டையை காண்பித்து அறிமுகப்படுத்திக்கொண்டு எங்களை தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.தேவதாஸ் முன்னிலையில் சுயபரிசோதனை செய்து காண்பித்து எங்களிடம் பணமோ, பொருளோ இல்லை என்பதை உறுதிசெய்து காண்பித்தோம். பின்பு அவரிடம் உங்கள் அலுவலகத்தை சோதனை செய்ய வந்திருப்பதாக கூறி அவரை உடனிருக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதற்கு அவரும் சம்மதித்து உடனிருந்தார். பின்பு மேற்படி அலுவலகத்தின் கிழக்கு புறத்தில் மேற்கு பார்த்தவாறு இருந்த அறையில் பதிவறை எழுத்தர் திரு.கணபதி த/பெ சாமிநாதனும், திரு.இளையராஜா த/பெ கலியமூர்த்தி, உதவியாளர் (தற்காலிக பணியாளர்) மற்றும் திரு.மாயகண்ணன் த/பெ ஆறுமுகம், உதவியாளரும் (தற்காலிக பணியாளர்) இருந்தனர். மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்திற்கு சென்றபோது அங்கு நில அளவை பிரிவு, இ சேவை மையம், தனி வட்டாட்சியர்(ச.பா.தி) மற்றும் தனி வட்டாட்சியர் (கு.பொ) அலுவலகங்கள் செயல்பட்டு வருவது தெரியவருகிறது. மேற்படி முதல் தளத்தின் மாடிபடிக்கு நேர் எதிரே வடக்கு பார்த்து இருந்த அறையை பார்த்தபோது, மேற்படி அறை கூட்ட அரங்கு என தெரிந்தது. மேற்படி அறையின் வலது புறம் வடக்கு பார்த்தவாறு இருந்த சிறிய அறையினுள் சென்றபோது மேற்படி அறை இ சேவை மையம் என்றும் மேற்படி அறையில் திருமதி.வித்யா, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி பிரிவு மூலமாக பணியமர்த்தப்பட்ட தரவு உள்ளீட்டாளர் என்று சொன்னார். மேற்படி அறைக்கு மேற்கு புறத்தில் வடக்கு பார்த்தவாறு தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவரது அறை இருந்தது. அதில் திரு.தினேஷ்குமார் த/பெ நடராஜன், இளநிலை உதவியாளர் மற்றும் திருமதி.கவிதா, தரவு உள்ளீட்டாளர் (தற்காலிக பணியாளர்) இருந்தனர். மேற்படி அறையின் மேற்கு பக்கம் வடக்கு பார்த்து இருந்த தனிவட்டாட்சியர் (கு.பொ) அவர்களின் அறையில் திருமதி.அருள்மொழி, க/பெ ராஜராம், தனி வட்டாட்சியரும் (கு.பொ) திரு.பொன்னன், பிரிவு எழுத்தர் குடிமை பொருள் (தற்காலிகம்) இருந்தனர். அவருக்கு மேற்கு புறம் வடக்கு பார்த்த இருந்த அலுவலக அறையின் திரு.தயாநிதி த/பெ செந்தில்குமரன், இளநிலை உதவியாளரும் இருந்தனர். மேலும் மேற்படி சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலக முதல் தளத்தின் கிழக்கு புறத்தில் இருந்த நில அளவை பிரிவினுள் சென்றபோது நுழைவு வாயிலின் இடது பக்கம் தெற்கு பார்த்தவாறு வட்ட துணை ஆய்வாளர் திரு.சுரேஷ் த/பெ சாரங்கபாணி அவர்களும், அதற்கு கிழக்கு புறத்தில் தெற்கு பார்த்தவாறு இருந்த அறையில் கஸ்தூரி க/பெ செல்வம் புல உதவியாளரும் அதற்கு

நேர் எதிர்த்தாற்போல் நில அளவையருக்கான பிரிவில் திருமதி.கலைச்செல்வி க/பெ குமார், முதுநிலை வரைவாளரும் இருந்தனர். அதனை தொடர்ந்து சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் வரண்டாவில் இருந்த நபர்களை வரண்டாவில் வைத்து பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து சோதனை செய்ததில் திரு.சின்னதுரையிடம் ரூ.200/-மும், திரு.வெங்கடேசனிடம் ரூ.7,000/-மும், திரு.அஸ்வினிடம் ரூ.5,500/-, திரு.செல்வராஜிடம் ரூ.1,500/-, திரு.செல்வத்திடம் ரூ.1,500/-மும், திரு.கந்தசாமியிடம் ரூ.22,000/-மும் இருந்தது. அவர்களை தனிதனியாக விசாரணை செய்ததில் திரு.கந்தசாமி த/பெ முத்து என்வரை தவிர மற்ற அனைவருமே தான் பணம் வைத்திருந்ததற்காக கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும் அவரவர்களிடமிருந்த பணம் அவர்கள் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி திரு.கந்தசாமி த/பெ முத்து என்பரை விசாரணை செய்த போது அவர் தனது ஓனர் திரு.சீனிவாசன் என்பவரது நிலத்தின் பட்டா பெயர் மாற்றம் சம்மந்தாக தனது நண்பர் திரு.சக்தி என்பவருடன் வந்திருந்தாகவும் மேற்படி தொகையானது பட்டா பெயர் மாற்றம் செய்ய அதிகாரிகளுக்கு கொடுக்க வைத்திருந்தாகவும் கூறினார். மேற்படி பணம் அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டிய இலஞ்சபணம் என்பதால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த அரசு அலுவலர்களையும், தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களை தனிதனியாக விசாரணை செய்ததில்

1. திரு.தேவதாஸ், தலைமையிடத்து துணை வட்டாட்சியரை அவரது இருக்கையில் வைத்து சோதணை செய்ததில் அவரிடம் ரூ.1200/- (500X2,100X2) இருந்தது. அதனை பற்றி கேட்க அவர் முன்னுக்கு பின் முரனாகவும் சரியான முகாந்திரமும் கூறாததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில்

வ.எண்.	மாதம்	தொகை
1.	ஜனவரி,	ரூ.86,991/-,
2.	பிப்ரவரி,	ரூ.87,700/-,
3.	மார்ச்,	ரூ.2,10,276/-,
4.	ஏப்ரல்,	ரூ.13,252/-
5.	மே,	ரூ.70,540/-
6.	ஜீன்	ரூ.91,367/-
7.	ஜீலை	ரூ.5,500/-
	மொத்தம்	**ரூ.5,65,626/-**

மேற்கண்டுள்ளவாறு கடந்த 07 மாதத்தில் ரூ.5,65,626/- வரவு மட்டுமே வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதனை பற்றி கேட்டபோது அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

2. திருமதி.அருள்மொழி, வட்டாட்சியர் (கு.பொ) அவரை பெண் காவலர் உதவியுடன், அவரது இருக்கையை காவல் குழுவினருடன் சோதணை செய்ததில் அவரிடம் ரூ.2,500/- (500X3, 200X3, 100X3, 50X2) இருந்தது. அதனை பற்றி கேட்க அவர் முன்னுக்கு பின் முரனாகவும் சரியான முகாந்திரமும் கூறாததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

3. மண்டல துணை வட்டாட்சியர் அவர்களது இருக்கையில் இருந்த திரு.முத்துவேல், கிராம உதவியாளர், தத்தாதிரிபுரம் கிராமம் என்பவரையும், அவர் அமர்ந்திருந்த இருக்கையின் மேஜையை சோதனை செய்ததில் மேஜையின் கீழ் அறையில் ரூ.15,000/- (500X10, 100X100) இருந்தது. அதனை பற்றி கேட்க அவர் தான் மண்டல துணை வட்டாட்சியர் திரு.அண்ணாமலை அவர்களின் வாய்மொழி உத்தரவு பேரில் தற்காலிகமாக இவ்வலுவலகத்தில் வந்து பணிபுரிந்து கொண்டிருப்பதாகவும் தான் இன்று 45 இருப்பிட சான்றும், 22 வருமான சான்றும் மற்றும் 25 சாதிசான்றும் மண்டல துணை வட்டாட்சியரின் இணைய வழிமுகவரியில் அவருக்கு பதிலாக approval செய்ததாகவும், அதன் தொடர்பாக பெற்ற இலஞ்சபணம் என்று சொன்னார். எனவே மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில்

வ.எண்.	மாதம்	தொகை
1.	மார்ச்	ரூ.26,500/,
2.	ஏப்ரல்	ரூ.1,13,471/-,
3.	மே	ரூ.94,100/-,
4.	ஜீன்	ரூ.43,250/-
5.	ஜீலை	ரூ.39,700/-
	மொத்தம்	**ரூ.3,17,021/-**

மேற்கண்டுள்ளவாறு கடந்த 05 மாதத்தில் ரூ.3,17,021/- வரவு மட்டுமே வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதனை பற்றி கேட்டபோது அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

4. திரு.பொன்னன், பிரிவு எழுத்தர் குடிமை பொருள் (தற்காலிகம்) என்பவரை சோதனை செய்ததில் அவரிடம் ரூ.43,500/- (500X81, 200X11, 100X8) இருந்தது. அதனை பற்றி கேட்க அவர் சின்னசேலம் வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மொத்தம் 91 நியாவிலைகடை செயல்பட்டு வருவதாகவும், கடைக்கு ரூ.500/-வீதம் வசூல் செய்த தொகை எனவும், அதில் ரூ.2000/- த்தை செலவு செய்து விட்டதாகவும் கூறினார். எனவே மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில்

வ.எண்.	மாதம்	தொகை
1.	ஜனவரி	ரூ.84,045/-
2.	பிப்ரவரி	ரூ.51,949/-
3.	மார்ச்	ரூ.32,520/-
4.	ஏப்ரல்	ரூ.51,600/-
5.	மே	ரூ.59,900/-,
6.	ஜீன்	ரூ.61,300/-,
7.	ஜீலை	ரூ.26,300/,
	மொத்தம்	**ரூ.3,67,614/-**

மேற்கண்டுள்ளவாறு கடந்த 07 மாதத்தில் ரூ.3,67,614/- வரவு மட்டுமே வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதனை பற்றி கேட்டபோது அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

5. திரு.இளையராஜா, த/பெ கலியமூர்த்தி, உதவியாளர் (தற்காலிக பணியாளர்) அவரை காவல் குழுவினருடன் சோதணை செய்ததில் அவரிடம் ரூ.1,500/- (500x3) இருந்தது. அதனை பற்றி கேட்க அவர் முன்னுக்கு பின் முரனாகவும் சரியான முகாந்திரமும் கூறாததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அவர்களது அறையை சோதணை செய்ததில் அவர் அலுவலகத்தின் வடக்கு சுவற்றின் தெற்கு நோக்கி இருந்த இரும்பு பீரோவின் உட்புற அறையை சோதணை செய்ததில் அதில் இருந்த ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் ரூ.8,000/- (500x16) பணம் இருந்தது. அதனை பற்றி அங்கிருந்த தலைமையிடத்து துணை வட்டாட்சியரிடம் கேட்டபோது அதை பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்றும் அது தொடர்புடைய எவ்வித பதிவுகளும் தங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளில் இல்லை என்றும் சொன்னார். எனவே மேற்படி பணம் விசாரனைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் தரை தளத்தில் இருந்த பதிவறையை சோதணை செய்த போது மேற்படி அறையில் இருந்த திரு.கணபதி, பதிவறை எழுத்தர் இருக்கைக்கு வலது புறத்தில் இருந்த மேஜை மேல் ரூ.500/- இருந்தது. அதை பற்றி கேட்க அது தத்தாதிபுரம் கிராம உதவியாளர் திரு.முத்துவேல் அவர்கள் தங்கள் வருகையை அறிந்தவுடன் வந்து வைத்து சென்றதாக கூறினார். எனவே மேற்படி பணம் ரூ.500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி பதிவறையில் பராமரிக்கப்பட்டு வந்து அஞ்சல் வில்லை பதிவேட்டை பார்வையிட்டதில் கடந்த 08.07.2026-க்கு பிறகு எவ்வித பதிவுகளும் பதியப்படவில்லை. மேலும் ரூ.1,413/-க்கான அஞ்சல் வில்லை தொடர்பாக கேட்டபோது தன்னிடம் இல்லை என கூறிவிட்டார். மேலும் பதிவறையில் பொதுமக்களிடமிருந்து பெற்ற விண்ணப்பம் தொடர்புடைய In and Out Register ஏதும் பராமரிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் அலுவலகத்தில் பணியில் இருந்த இதர நபர்களையும் அவர்களது இருக்கைகளையும் சோதணை செய்ததில் அவர்களிடம் கைப்பற்ற கூடிய பணமோ, ஆவணமோ ஏதும் இல்லாததால் அவர்களிடம் திடீர்சோதணையின்போது இருந்தமைக்கான வாக்குமூலம் மட்டும் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து தலைமையிடத்து துணைவட்டாட்சியரிடம், சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் இருக்கும் 05 தற்காலிக பணியாளர்கள் முறையே திரு.இளையராஜா, திரு.மாயகண்ணன், திரு.சீனிவாசன் திருமதி.காமாட்சி மற்றும் திருமதி.கவிதா ஆகியோர்களின் பணி ஆணை அல்லது செயல்முறை ஆணை ஏதேனும் இருப்பின் கோரப்பட்டது. அதற்கு அவர் அவ்வாறு எந்த ஒரு எழுத்து பூர்வமான ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை என்றும் 01 முதல் 04 வரை உள்ள நபர்கள் சின்னசேலம் வருவாய் வட்டாட்சியரின் வாய்மொழி உத்தரவின்பெயரிலும் திருமதி.கவிதா மட்டும் சின்னசேலம் சமூகநல பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் திரு.அனந்தகிருஷ்ணன் அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் அவர்களது அலுவலகத்தில் பணிபுரிவதாக சொன்னார். பின்னர், மேற்படி அலுவலகத்தில் இருந்த கணினி அறை, வரவேற்பு அறை, வராண்டா, தேர்தல் அறை மற்றும் கூட்ட அரங்கு மற்றும் உணவு அருந்தும் அறை மற்றும் இதர அறைகளை சோதணை செய்ததில் கைப்பற்றப்படகூடிய பணமோ, பொருளோ ஏதும் இல்லை. மேலும் இவ்திடீர் சோதணையின் மாவட்ட ஆட்சியருடன் கள்ளக்குறிச்சி அவர்களுடன் இரயில் நிலையம் திறப்பு விழா தொடர்பாக சென்றமைக்கு இயக்க பதிவேட்டில் பதிவுகள் உள்ளதா என கேட்டபோது அவ்வாறு எந்த ஒரு பதிவேடும் பராமரிக்கப்படவில்லை என்று சொன்னார். அதனை தொடர்ந்து பணியில் இருந்த சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.தேவதாஸ் அவர்களிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகை பதிவேடு மற்றும் இதர பதிவேடுகளை பற்றி கேட்டபோது 1. வருகை பதிவேடு-2026, 2. பொது மனுக்கள் பதிவேடு-2026, 3. ரொக்கபதிவேடு, 4. கொடுபடா பதிவேடு (UDP Register) மற்றும் 5. GDP பதிவேடு-2026 ஆகியவற்றை எடுத்து

ஆஜர் செய்தார். மேலும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் கையிருப்பு பதிவேட்டை (Personal Cash Register) பற்றி கேட்டபோது அவ்வாறு ஏதும் இவ்வலுவகலத்தில் பராமரிக்கப்படவில்லை என்று கூறினார். மேலும் சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலக ரொக்க பதிவேட்டை பார்வையிட்டபோது மேற்படி பதிவேடு 07.09.2022 ஆரம்பிக்கப்பட்டு 28.06.2026 தேதி வரை மட்டுமே பதிவுகள் உள்ளது. அதனை தொடர்ந்து கொடுபடா பதிவேடு (UDP Register) பார்வையிட்டதில் மேற்படி பதிவேடு 05.09.2024 ஆரம்பிக்கப்பட்டு 30.06.2026 தேதி வரை மட்டுமே பதிவுகள் உள்ளது. மேலும் சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வருகை பதிவேட்டை பார்வையிட்டபோது ஜீலை 2026 மாதம் முழுவதும் வட்டாட்சியர் சரிபார்த்து சுருக்கொப்பம் செய்யவில்லை. எனவே மேற்சொன்ன பதிவேடுகள் மற்றும் பணம் ரூ.94,200/- இலஞ்ச பணம் மட்டும் கைப்பற்றப்பட்டது. கொடி நாள் வசூல் குறித்து இவ்வலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.தேவதாஸ் அவர்களிடம் கேட்டபோது, சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், சமூகநல பாதுபாப்பு திட்டபிரிவு, குடிமை பொருள் வழங்கல் பிரிவு மற்றும் நிலஅளவையிரிவு ஆகிய அலுவலகங்களில் கொடிநாள் வசூல் ஆன்லைன் மூலம் வசூலிப்பதாவும், தனியாக பதிவேடு ஏதும் பராமரிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் தனிவட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களது அலுவலக வருகை பதிவேட்டை பார்வையிட்டபோது மேற்படி பதிவேட்டில் ஜீன் 11-ந்தேதியிலிருந்து நாளது தேதிவரை தனிவட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களது சுருக்கொப்பம் இல்லை. மேலும் தனிவட்டாட்சியர் (ச.பா.தி) அலுவல் நேரத்தில் அலுவலகத்தில் இல்லாததிற்கான எவ்வித பதிவுகளும் இல்லை. எனவே மேற்படி தனிவட்டாட்சியர் (ச.பா.தி) அலுவலக பதிவேடும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.தேவதாஸ், திரு.முத்துவேல், திரு.பொன்னன், பிரிவு எழுத்தர் குடிமை பொருள் (தற்காலிகம்) குடிமை பொருள் வட்டாட்சியர் திருமதி.அருள்மொழி, உதவியாளர் திரு.இளையராஜா (தற்காலிக பணியாளர்), பதிவறை எழுத்தர் திரு.கணபதி, திரு.கந்தசாமி, தனிநபர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 17.07.2026-ம் தேதி சுமார் 17.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 18.07.2026-ம் தேதி சுமார் 02.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தொிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட தொகை ரூ.94,200/- சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும் அலுவலர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த கணக்கில் வராத தொகைகள் முறையற்ற வழியிலும், நேர்மையற்ற முறையிலும், அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் தற்காலிக பணியாளர்கள் மூலமாகவும், தனியர்கள் உதவியுடனும் அரசு வேலைகளை அனுகூலமாக முடித்த அல்லது முடித்து கொள்ள பிரதிபலானாக பெற்றிருக்ககூடிய பணமாக இருக்ககூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும் நான் கொடுக்கும் இந்த புகாரின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட அலுவலர்களான திரு.தேவதாஸ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சின்னசேலம், திருமதி.அருள்மொழி, வட்டாட்சியர் (கு.பொ), சின்னசேலம்,

திரு.முத்துவேல், கிராம உதவியாளர், தத்தாதிரிபுரம் கிராமம், கள்ளக்குறிச்சி திரு.பொன்னன், பிரிவு எழுத்தர் குடிமை பொருள் (தற்காலிகம்) திரு.கணபதி, பதிவறை எழுத்தர், சின்னசேலம் திரு.கந்தசாமி, த/பெ முத்து, தணியர் மற்றும் திரு.இளையராஜா, த/பெ கலியமூர்த்தி, உதவியாளர் (தற்காலிக பணியாளர்) ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

Madam,

Received the above computer typed complaint on 18.07.2026 at about 13.00 hrs. After getting oral permission from the DVAC, Chennai, I am Registering a case in Kallakurichi Vigilance and Anti-Corruption, Cr.No.07/2026/KLK, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS at 15.00 hrs today on 18.07.2026 sd xxxxxx on 18.07.2026 (E.Arunraj) (Inspector of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Principal District and Sessions Judge, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

18.07.2026.

(E.Arunraj)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.